**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 49/2025 - PW-6**

| | |
|---|---|
| Name | திரு. பிரகாஷ் |
| Husband/Father Name | தேவேந்திரன் |
| Village /Area | கீரைசாத்து |
| Taluk | காட்பாடி |
| Occupation | வெல்டர் |
| Age | 40 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.01.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 15.01.2025 அன்று பொன்னையிலிருந்து சோளிங்கர் ரோட்டில் நானும் நந்தகுமாரும் சென்று கொண்டிருந்த போது பொன்னை காவல் உதவி ஆய்வாளர் எங்களிடம் ராஜேஷ் என்பவரை காட்டி தெரியுமா என்றார்கள். ஏதோ பிரச்சனை தொடர்பாக விசாரிப்பதாக கூறினார்கள். போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். அதன் அடிப்படையில் நான் கையொப்பம் இட்டேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது **அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

15.01.2025 ம் தேதி நானும் எனது நண்பர் நந்தகுமார் என்பவரும் சொந்த வேலையாக சோளிங்கர் செல்ல பொன்னை டூ சோளிங்கர் ரோட்டில் சென்று கொண்டிருந்த போது பொன்னை போலீசார் ராஜேஷை கைது செய்து விசாரித்து கொண்டிருந்த போது அவர் எந்த விதமான வற்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் சாட்சி நந்தகுமார் முன்னிலையிலும் பதிவு செய்ததாகவும்

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தை மகஜரில் என் முன்னிலையிலும் சாட்சி நந்தகுமார் முன்னிலையிலலும் கைப்பற்றியதாக கூறிவிட்டு ஆஜர் எதிரி எனது ஊர்காரர் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். போலீசார் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்யும் போது நானும் நந்தகுமாரும் போலீசாரும் இருந்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் குறித்து நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் படித்து பார்க்கவில்லை. நானும் நந்தகுமாரும் கையொப்பம் இட்ட தாளில் விவரங்கள் எழுதப்பட்டிருந்தது. நான் கையொப்பம் இட்ட காரணத்தால் தான் சாட்சியாக அழைக்கபட்டுள்ளேன். மற்றபடி எதிரி ராஜேஷ் கல்லை அடித்ததாக கூறப்பட்டுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.01.20 18:45:57 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.